வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 5.3.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

மக்களுக்கான **கல்வி, திறன் மேம்பாடு, மற்றும் சுகாதாரத் துறைகளில்** முதலீடுகளை அதிகரிக்க, அரசு, முக்கியத் துவம் அளித்து வருவதாக,பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

கால்நடைகளுக்கான **நோய்த் தடுப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டு பணிகளுக்கு,** 3 ஆயிரத்து 880 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை அமல்படுத்த, மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

தமிழக முதலமைச்சர் திரு முக ஸ்டாலின் தலைமையில், சென்னையில் இன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், **மக்களவைத் தொகுதி மறு சீரமைப்பை** நிராகரித்து, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுச்சேரியில், ராஜீவ்காந்தி சிலை முதல், இந்திராகாந்தி சிலை வரை, 4 **வழி மேம்பாலம்** அமைக்கப்பட உள்ளதாக, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் தெரிவித்துள்ளார்.

மோடி-கருத்தரங்கம்

மத்திய அரசு, தொழில் துறை மற்றும் உள்கட்டமைப்பு துறையில் முதலீடுகளுக்கு அளித்த அதே அளவு முக்கியத்துவத்தை, மக்கள், பொருளாதாரம் மற்றும் புத்தாக்க பணிகளுக்கும் அளித்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். வேலை வாய்ப்பு குறித்து, இணையவழியில் இன்று நடைபெற்ற, பட்ஜெட்டிற்கு பிந்தைய கருத்தரங்கில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மக்களுக்கான முதலீடுகள் என்பது, கல்வி, திறன் மேம்பாடு, சுகாதாரம் ஆகிய 3 தூண்களின் மேல் நிற்பதாக பிரதமர் குறிப்பிட்டார். இந்தியாவில் கல்வித் துறை, நீண்ட கால இடைவெளிக்கு பிறகு தற்போது பெரிய அளவில் மாற்றம் அடைந்து வருவதை, அனைவருமே காண முடியும்

என்றும், சுகாதார வசதிகளை, மக்களின் வீட்டருகே கொண்டு செல்லும் நோக்கத்துடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். டிஜிட்டல் சுகாதார வசதிகளை, அரசு, பரவலாக்கி இருப்பதாகவும், தொலை நிலை மருத்துவ சேவைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் வரை, நீட்டிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். பிரதமரின் உரையில் இடம் பெற்ற மேலும் சில முக்கிய அம்சங்கள்.................

ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை ஊக்குவிக்க, பட்ஜெட்டில் பல்வேறு நடவடிக்கைகள் அறிவிக்கப் பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பணிகளுக்கு, 1 லட்சம் கோடி ரூபாய் அடிப்படை நிதி உருவாக்கப்பட்டுள்ளதால் DeepTech உள்ளிட்ட நவீன துறைகளில் முதலீடுகள் அதிகரிக்கும் என அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவுத் துறையில், நம்பகமான, ஜனநாயக நாடு ஒன்றினால், குறைந்த செலவில் புதிய தீர்வுகள் உருவாக்கப்படுவதை எதிர்பார்த்து, உலகமே காத்திருக்கும் நிலையில், இந்தியா, செயற்கை நுண்ணறிவு திறன்களை மேம்படுத்துவதற்கான, தேசிய பெருமொழி மாதிரி ஒன்றை உருவாக்கும் என பிரதமர் தெரிவித்தார். இந்த விஷயத்தில், தனியார் துறையினரும், உலக நாடுகளுக்கு ஒரு படி முன்னே நிற்பது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாவை மேம்படுத்த இவ்வாண்டு மத்திய பட்ஜெட்டில் முக்கிய முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். இதன்படி நாடு முழுவதும், சுற்றுலா வாய்ப்பு அதிகம் உள்ள 50 இடங்கள், சுற்றுலா பயணிகளுக்கு ஏற்றதாக மேம்படுத்தப்படும் என்றும் உள்ளூர் அளவில் வேலை வாய்ப்புகள் ஏற்பட ஏதுவாகும் என்றும் அவர் கூறினார்.அரசின் இத்தகைய நடவடிக்கைகளால், தொழில் நுட்பத்தில் சிறந்த, ஆரோக்கியமான-திறன்மிகு தொழிலாளர் சக்தியுடன் கூடிய, முன்னேறிய நாடாக, 2047-ஆம் ஆண்டிற்குள் இந்தியா மேம்படும் என்று பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

*அமைச்சரவை முடிவுகள்*

கால்நடைகளுக்கான **நோய்த் தடுப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டு பணிகளுக்கு** 3 ஆயிரத்து 880 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை

அமல்படுத்த, மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. தடுப்பூசி திட்டம் இதில் முக்கிய அம்சமாக இருக்கும் என்று, மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பசு அவுஷதி திட்டம் மூலம், கால்நடைகளுக்குத் தேவையான ஜெனரிக் மருந்துகள், மலிவு விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

உத்தராகண்ட் மாநிலத்தில், சோன் பிரயாக் முதல், கேதார்நாத் வரை, 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கயிற்றுப் பாதை அமைக்கப்படும் என்றும், இதனால் இவ்விரு இடங்களுக்கும் இடையிலான பயணம், சுமார் 9 மணி நேரத்தில் இருந்து, 36 நிமிடங்களாக குறையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். பர்வத்மாலா பரியோஜனா திட்டத்தின் கீழ், சாமோலி மாவட்டம் கோவிந்த்காட்-ஹேம்குண்ட் சாகிப் இடையே, 2 ஆயிரத்து 730 கோடி ரூபாய் செலவில், கயிற்றுப் பாதை அமைக்கவும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

*மோடி-உத்தராகண்ட்*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை உத்தராகண்ட் மாநிலத்திற்கு பயணம் மேற்கொள்கிறார். கங்கா மாதாவின் குளிர்காலத் தலமான முக்வா கிராமத்தில் கங்கா மாதாவை வழிபட்ட பின்னர், ஹர்சில் பகுதியில், மலையேற்ற பைக் பேரணி ஒன்றை அவர் கொடி அசைத்து தொடக்கி வைத்து, பொதுக் கூட்டம் ஒன்றிலும் உரையாற்றுவார். இதற்கிடையே உத்தராகண்டில், கங்கோத்ரி, யமுனோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய சார்தாம் கோவில்களின் தெய்வத் திருமேனிகள் குளிர்காலத்தில் எழுந்தருளும் 4 புண்ணியத் தலங்களுக்கு, ஏராளமான பக்தர்கள், பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

*மகளிர்-பஞ்சாயத்*

நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும், பெண்களுக்கு உகந்த தலா ஒரு முன் மாதிரி பஞ்சாயத்தை உருவாக்கும் நோக்கத்திலான, மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் புதிய முன்முயற்சித் திட்டத்தை, பஞ்சாயத்து ராஜ் இணை அமைச்சர் பேராசிரியர் எஸ்பி சிங் பகேல், சுகாதாரத் துறை இணை அமைச்சர் திருமதி அனுபிரியா பட்டேல் ஆகியோர், இன்று புதுடெல்லியில், தேசிய மாநாடு ஒன்றில் தொடக்கி வைத்தனர். பல்வேறு அமைச்சகங்கள், துறைகள், மற்றும், ஐ நா மக்கள் தொகை நிதியம் உள்ளிட்ட சர்வதேச

அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் இப்புதிய முன்முயற்சியைத் தொடக்கி உள்ளது.

*தொகுதி மறுவரையறை*

2026-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படும், மக்களவை **தொகுதி மறுவரையறை பணி**களை, தமிழக முதலமைச்சர் திரு முக ஸ்டாலின் தலைமையில், சென்னையில் இன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டம், ஏகமனதாக நிராகரித்து உள்ளது. புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில், **தொகுதி மறுவரையறை நடைமுறைகளை** மேற்கொண்டால், தமிழகம் உட்பட தென்மாநிலங்களின், **அரசியல் பிரதிநிதித்துவ** உரிமைகள் பாதிக்கப்படும் என வலியுறுத்தி, இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது, மக்கள் தொகையை கட்டுப்படுத்தும் பணிகளில் சிறப்பாக செயல்பட்டுள்ள, தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களை தண்டிப்பது போலாகும் என்று, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில் கூறினார். 1971-ஆம் ஆண்டு **மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி வரையறை**, 2026-ஆம் ஆண்டிற்கு அப்பால் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தொகுதி மறுசீரமைப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த தென் மாநிலங்களுக்கு இடையில் கூட்டு நடவடிக்கை குழு ஒன்றை அமைக்கவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திமுக, அஇஅதிமுக, காங்கிரஸ், பாமக, தேமுதிக, விடுதலை சிறுத்தைகள், தவெக உள்ளிட்ட கட்சிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டன. பிஜேபி, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள், கூட்டத்தை புறக்கணித்தன.

*லட்சுமி நாராயணன்*

புதுச்சேரியில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில், ராஜீவ்காந்தி சிலை முதல், இந்திராகாந்தி சிலை வரை, ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 4 வழி மேம்பாலம் அமைக்கப்பட உள்ளதாக பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் தெரிவித்துள்ளார்.

இதற்கான புதுச்சேரி அரசின் திட்ட வரைவுக்கு, மத்திய அரசு ஒப்புதல் அளித்து இருப்பதாக, அவர் இன்று சட்டப்பேரவை வளாகத்தில், செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். புதுச்சேரியில் இருந்து கடலூர் வரையிலான சாலை முழுவதையும் 4 வழிப் பாதையாக மாற்ற, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இப்பணிகள் 18 மாதங்களில் முடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கடலூர் சாலையில், இடையார் பாளையம், நோணாங்குப்பம் உள்ளிட்ட இடங்களில் புதிய பாலங்களை கட்டவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் பேட்டியில் இருந்து சில பகுதிகள்............

*சாம்பல் புதன்*

கிறிஸ்துவ சமூகத்தினரின் 40 நாள் தவக்காலம், சாம்பல் புதன் நாளான இன்று முதல் தொடங்கி உள்ளது. தவக்காலம் தொடங்குவதை ஒட்டி, புதுச்சேரியில் ஜென்மராகினி மாதா பேராலயம், இருதய ஆண்டவர் பசிலிக்கா, வில்லியனூர் லூர்து மாதா தேவாலயம் உட்பட பல்வேறு தேவாலங்களில் நடைபெற்ற திருப்பலியில் ஏராளமான கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டனர்.

கிரிக்கெட்

ஐசிசி சேம்பியன்ஸ் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் தென்ஆப்பிரிக்கா-நியுசிலாந்து அணிகளுக்கு இடையே, லாகூரில் இன்று நடைபெறும் 2-ஆவது அரை இறுதிப் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடிய நியுசிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில், 6 விக்கெட் இழப்பிற்கு, 362 ரன் எடுத்து, தென்னாப்பிரிக்க அணிக்கு, 363 ரன் என்னும் வெற்றி இலக்கை நிர்ணயித்துள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறும் அணி, வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள இறுதிப் போட்டியில், இந்திய அணியுடன் மோதும். இந்திய அணி, நேற்று துபாயில் நடைபெற்ற முதலாவது அரை இறுதிப் போட்டியில், ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. நேற்றைய போட்டியில் ஆஸ்திரேலிய அணி தோல்வியுற்றதைத் தொடர்ந்து, ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் **ஸ்டீவ் ஸ்மித்**, ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் இருந்து, ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

*விமானம்-ஆக்ஸிஜன்*

இந்திய விமானப் படையின் **தேஜஸ்-**இலகுரக போர் விமானங்களை இயக்கும் விமானிகளுக்குத் தேவையான ஆக்ஸிஜனை, விமானம் பல்லாயிரம் அடி உயரத்தில் பறக்கும் போதே, தானாகத் தயாரித்துக் கொள்ளும் வகையில், முற்றிலும் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்டுள்ள, புதிய தொழில் நுட்பத்தை, டிஆர்டிஓ விஞ்ஞானிகள் வெற்றிகரமாக பரிசோதித்து உள்ளனர். திரவ ஆக்ஸிஜன் சிலிண்டர்களை, விமானிகள் தங்களுடன் எடுத்துச் செல்லும் நிலையை தவிர்க்க இதனால் ஏதுவாகும் என்று டிஆர்டிஓ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. டிஆர்டிஓ விஞ்ஞானிகளுக்கும், முக்கியமான இந்த சாதனையை எட்டுவதில் ஒத்துழைப்பாக இருந்த தனியார் நிறுவனங்கள் உட்பட அனைவருக்கும் பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

மக்களுக்கான கல்வி, திறன் மேம்பாடு, மற்றும் சுகாதாரத் துறைகளில் முதலீடுகளை அதிகரிக்க, அரசு, முக்கியத் துவம் அளித்து வருவதாக,பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டு பணிகளுக்கு, 3 ஆயிரத்து 880 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை அமல்படுத்த, மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

தமிழக முதலமைச்சர் திரு முக ஸ்டாலின் தலைமையில், சென்னையில் இன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், மக்களவைத் தொகுதி மறு சீரமைப்பை நிராகரித்து, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுச்சேரியில், ராஜீவ்காந்தி சிலை முதல், இந்திராகாந்தி சிலை வரை, 4 வழி மேம்பாலம் அமைக்கப்பட உள்ளதாக, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/5.3.2025/Script/

-------------------------------